Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இரண்டாம் சரபோஜி கால சிற்பங்கள் – ஓர் ஆய்வு

முனைவர் சு.விஜயா
உதவி பேராசிரியை வராற்றுத்துறை
ஸ்ரீ ஜி.வி.ஜி.விசாலாட்சி பெண்கள் கல்லூரி, உடுமலைப்பேட்டை
Mail ID: vijayasweety83@gmail.com

கலைகளுக்கு பெயர் பெற்ற தஞ்சை மாநகரமானது மராட்டிய மன்னர்களுடைய ஆட்சி காலத்தின் போது சிறந்து விளங்கியது. கி.பி.1798 முதல் 1832 வரை தஞ்சையை சிறப்புடன் ஆட்சி செய்தவர் இரண்டாம் சரபோஜி ஆவார். மராட்டிய மன்னர்களில் கலைக்கென்று தொண்டாற்றியவர்களில் முக்கிய இடத்தை வகிக்கிறார். இவருக்கு கலைவேந்தன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவர் காலத்தில் பழைய கலைகளில் மேலைநாட்டு தாக்கம் ஏற்பட்டு புதிய கலைகள் தோன்றின. கலைகளில் சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதை அவர் காலத்து சிற்பங்கள் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம்.

## சிற்பக்கலை:

மன்னர்களின் ஆட்சி காலத்தைப்பற்றி அறிய உதவும் ஆதாரங்களில் ஒன்று சிற்பக்கலை, கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனதிற்கு இன்பத்தை கொடுக்கும் கலைகளில் சிற்பக்கலை முக்கிய இடத்தை பெறுகிறது. இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் மரம், செங்கல் கருங்கல், சலவைக்கல் ஆகியவற்றில் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் சத்திரங்கள், கோயில்கள், அரண்மனையிலும் காணலாம். கடவுள் திரு உருவங்கள் கலைஞர்களின் உருவங்களை சிற்ப வடிவில் வடிக்கச் செய்துள்ளார். தனது மேற்பார்வையில் நூற்றி எட்டு தேவஸ்தானங்களை வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

## சுதைச் சிற்பம்:

திருமாலின் பத்து அவதாரக் காட்சிகள் மற்றும் சிவன் திருமால் இவர்களின் திருமணக்காட்சிகள் சிறப்புடையதாகும். தஞ்சை அரண்மனையில் உள்ள தர்பார் மண்டபத்தில் சுதைச் சிற்பங்கள் சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன.

## புடைப்புச் சிற்பம்:

தஞ்சாவூரில் உள்ள எல்லையம்மன் கோயிலில் குந்தளாதேவி அம்மன் புடைப்புச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இது சரபோஜி மன்னர் 1803-ஆம் ஆண்டு திருப்பணிகளில் இக்கோவிலும் ஒன்று.

## கற் சிற்பம்:

தஞ்சை வெண்ணாற்றாங்கரையில் சரபோஜி மன்னரின் உதவியுடன் தளிகேசுவரர் கோயிலின் முகமண்டபத்தில் சரபோஜி மற்றும் அவரது மனைவி யமுனாபாபாயி ஆகியோர்களின் கற்சிலைகளை இராமோசி என்பவர் எடுப்பித்தார் என்பதற்கு சரஸ்வதி மஹால் உள்ள ஆவணங்களில் காணமுடிகிறது.

**சலவைக்கற்படிவம்:**

தஞ்சை அரண்மனை கலைக்கூடத்தில் கற்படிவம் காணப்படுகிறது. சரபோஜி மன்னர் நின்ற நிலையில் கூப்பிய கரங்களுடன் காட்சியளிக்கிறார். இது அங்குள்ள மூன்று அடி உயர மேடையில் காணப்படுகிறது. இதில் மன்னர் தலையில் தலைப்பாகை இடுப்பில் உடைவாள் மராத்திய அரச உடை, கழுத்தில் முத்துமாலைகளுடன் காட்சி தருகிறார். உலகப் புகழ் பெற்ற இச்சிற்பத்தை செதுக்கியவர் இத்தாலி நாட்டு சிற்பியான ஜான் ப்ளாக்சுமேன் ஆவார். மன்னர்களின் உருவச் சிலைகளில் வரிசையில் சலவைக் கற்சிற்பமாகக் கிடைக்கும் ஒரே சிற்பம் சரபோஜி மன்னருடையதுதான்.

**பித்தளைப் படிமம்:**

சரபோஜி மன்னர் அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் சுமார் 30 செண்டி மீட்டர் உயரமுடைய இரண்டு பித்தளைப்படிமங்கள் தஞ்சையில் இருந்துள்ளதைத் தொல்லியல் துறைவினர் கண்டுபிடித்துள்ளனர்.

**செங்கல்மரச் சிற்பங்கள் :**

சரபோஜி மன்னர் தம் அன்புநாயகி முத்தம்மாளின் நினைவாக ஒரத்தநாட்டில் அவள் பெயரில் 1800-ஆம் ஆண்டில் ஒரு சத்திரம் ஒன்றை கட்டினார். இச்சத்திரத்தில் உள்ளே செங்கல் சிற்பங்களும் மாடியில் மரச்சிற்பங்களும் ஏராளமாக செதுக்கப்பட்டுள்ளன. சத்திரத்தின் வெளிப்பகுதியில் மேல்புறத்தில் 500 சென்டி மீட்டர் உயரத்தில் நர்த்தன விநாயகர் சிற்பம் காணப்படுகிறது. இசை, நாட்டியம், நாடடுப்புறக் கலைகள் தொடர்பான சிற்பத் தொகுதிகள் தொடர்ச்சியாக செதுக்கப்பட்டுள்ளன.

நாட்டியமாடுகின்ற குழுவில் நட்டுவனார்கள் கைத்தாளமிட்டு பாடுகின்றனர். மத்தளம், புல்லாங்குழல், மகுடி, தாளம், முரசு ஆகியவை இசைக்கப்படுகிறது. நாட்டிய மகளிர் தலையில் கொண்டை போட்டுள்ளனர். இவர்கள் அணிந்துள்ள சேலைகளில் கோடுகளும், பூக்களும் காணப்படுகின்றன. கால்களில் சலங்கை, கைகளில் வளையல், தோல்களில் அணிகலன்களை அணிந்துள்ளனர்.

பெண்கள் கோலாட்டம் ஆடுதல், பாம்பாட்டி மகுடி ஊதுதல், பல வீரர்கள் குதிரையிலமர்ந்து போருக்குச் செல்லுதல், இரு இளவரசர்கள் குதிரைமீதமர்ந்து போரிடுதல், வீரர்கள் துப்பாக்கிகளை ஏந்திச் செல்லுதல், மிருகங்களை வேட்டையாடுதல், யானைகள் பல்வேறு காட்சிகளில் சிற்பங்களாகச்

செதுக்கப்பட்டுள்ளன. சத்திரத்தின் மாடியிலுள்ள மரத்தூண்களில் வேல்கள், பலவகை பூச்சாடிகள் செதுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் சரபோஜி ஆட்சிக்காலத்தில் பல கலைகளை இவர் வளர்த்தாலும் சிற்பக்கலைக்கு எவ்வாறு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதை இங்கு கொடுக்கப்பட்ட குறிப்புகளில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இவர் காலத்து சிற்பங்கள் அனைத்தும் உயிருடன் பேசக்கூடியவையாக இன்றளவும் திகழ்கின்றன. காண்போரை வியக்கும் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல் :**

1. அறிவுடைநம்பி, மா.சா. தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கிய தொகுதி -1 தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994 – ப.171.
2. சதாசிவம், மாமன்னர் சரபோஜி ஆய்வுக் கோவை – 2 சரசுவதி மஹால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1990 – ப.85.
3. குடவாயில் பாலசுப்பிரமணியம் சோழமண்டலத்து நாயக்கர்களின் சிற்பமும் ஓவியமும், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987 – ப.357.
4. பாலசுப்பிரமணியம், எஸ்.ஆர். சோழர்களின் கலைப்பாணி, ப.120
5. இராசு செ., தஞ்சை மராட்டிய கல்வெட்டுகள், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987 – ப.156.
6. சுவாமிநாதன் அ., “தமிழக வரலாறு” 2000 வரை சென்னை, 1995 – ப.92